# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 387/ந/2025, நாள் 11.03.2026

K.G.பூபதி,
பூவிருந்தவல்லி, சென்னை. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பூவிருந்தவல்லி நகராட்சி,
பூவிருந்தவல்லி, சென்னை. – எதிர்மனுதாரர்

சென்னை, பூவிருந்தவல்லி, நண்பர்கள் நகர், 3–வது தெரு, எண்.58 என்ற முகவரியில் வசிக்கும் திரு.K.G.பூபதி என்பவரது 08.11.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.11.2025 அன்று பெறப்பட்டு, 387/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை, பூவிருந்தவல்லி, நண்பர்கள் நகர், 3–வது தெரு, எண்.58 என்ற முகவரியில் வசிக்கும் திரு.K.G.பூபதி என்பவரது 08.11.2025 நாளிடப்பட்ட மனுவுடன் பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 13.08.2024 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“வார்டு 10,11,12களில் அனைத்து சொத்து வரிகளும் மறுவரை செய்யப்பட்ட ஆண்டுகளில் ABC என பகுதிவாரியாக மறுவரை செய்யப்படும்போது பணியில் இருந்த அலுவலர்கள் என்ன விதமாக அறிக்கை சமர்ப்பித்தார்கள். அவர்களின் அறிக்கையை ஏற்கப்பட்டதா நிராகரிக்கப்பட்டதா அவ்வாறு நிராகரிக்கப்பட்டது எனில் மேல் முறையீடு செய்யப்பட்டதா அவ்வாறு மேல்முறையீடு செய்யப்பட்டது எனில் அதற்கான ஆவண நகல் அனைத்தும் வழங்கினால் எங்கள் பகுதி வாழ் மக்களின் நலன் கருதி எங்களின் தரப்பு நியாயத்தை எடுத்துரைத்து நாங்கள் மேல் முறையீடு செய்யவோ நுகர்வோர் நீதிமன்றம் நாடி தீர்வு காண ஏதுவாக இருக்கும்.

வரி நிர்ணயம் செய்ய ABC என பகுதிகளாக பிரித்து அதற்கான வசதிகள் இருந்தால்தான் ABC என வரியில் பாகுபாடு செய்து குடியிருக்கும் பொதுமக்களுக்கு வரி நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என தெரிந்தும் அதனை கண்டுகொள்ளாமல் இருந்தது மிக பெரிய குற்றம் ஆகும்.

மேலும் மறுவரை செய்யும் ஆண்டுகளில் பணியில் இருந்த/செய்த அலுவலர்கள் முறையாக அரசுக்கு உரிய விளக்கத்துடன் அறிக்கை தாக்கல் செய்து இருந்தால் அன்றைய தினமே தீர்வு ஏற்பட்டு இருக்கும் என்பது எங்கள் பகுதியில் குடியிருப்போருக்கு மிகவும் உதவிகரமாக இருந்து இருக்கும் என்பதனையும் நினைவு கோருகின்றேன்.

எனவே உயர்திரு ஆணையாளர் அவர்கள் எங்கள் பகுதி வாழ் குடியிருப்போர் நலன் கருதி வரி மறுவரையில் நடந்த குளறுபடியை சரி செய்ய உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.''

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் 23.02.2026 நாளிட்ட கடிதம் ந.க.எண்.406/2026/அ1–ல் தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

“மனுதாரரின் புகார் விண்ணப்பத்தில் 01.04.2022 முதல் சொத்துவரி/காலிமனை வரி சீராய்வு செய்ததில் வார்டு எண்.10,11 மற்றும் 12–ல் குளறுபடி உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு கீழ்கண்டுள்ளவாறு விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. பூவிருந்தவல்லி நகராட்சியில் உள்ள 21 வார்டுகளிலும் அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர் நாள் 01.04.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து உயர்வு செய்ய பூவிருந்தவல்லி நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.34, நாள் 01.04.2022ல் இந்நகராட்சி மன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கனவே உள்ள மண்டல அடிப்படை மதிப்பினை உயர்வு செய்து பொதுமக்களின் தகவலுக்காக 04.04.2022 தினசரி செய்தி தாளில் விளம்பரம் செய்திட 04.04.2022 மற்றும் 15.04.2022ல் வெளியிட்டும் மற்றும் அலுவலக விளம்பரப்பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டு சொத்துவரி/காலிமனை வரி உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பிற்கு ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் 30 தினங்களுக்குள் எழுத்துபூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இச்சொத்துவரி/காலிமனை வரி உயர்வு தொடர்பாக எந்தவொரு ஆலோசனைகளும் பொதுமக்களிடமிருந்தோ அல்லது வேறு நிறுவனங்களிடமிருந்தோ வரப்படவில்லை. எனவே நகராட்சி நிதி நிலையினை கருத்திற்கொண்டு நகர்மன்ற தீர்மான எண்.37, நாள் 23.05.2022ல் உயர்வு செய்திட தீர்மானிக்கப்பட்டுள்ள மண்டல அடிப்படை மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டு 04.04.2022 ல் தினசரி தாளில் விளம்பரம் செய்யப்பட்டு மாவட்ட அரசிதழ் வெளியிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. மேற்படி மாற்றி அமைக்கப்பட்ட மண்டலங்கள் மற்றும் மண்டல மதிப்பு உறுதி செய்து 01.04.2022 முதல் அமுலுக்கு வரப்பட்டு சொத்துவரி/காலிமனை வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. அரசாணை மற்றும் நகர்மன்ற தீர்மான அடிப்படையில் மட்டுமே சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டுள்ளது என்பதனை பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது”.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் ஆகியோரை 27.02.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு.K.G.பூபதி என்பவர் 27.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில்-

"எங்களது பகுதி மக்களின் நியாயத்தை தெரியப்படுத்தி முறையிட ஏதுவாக வார்டு எண்.10, 11 மற்றும் 12–ல் உள்ள பகுதிகளை எதனை அடிப்படையாகக் கொண்டு மண்டலம் என வரையறை செய்தார்கள் என்பதற்கான விவரம் மற்றும் அறிக்கையினை வெளியிட வேண்டும்.

பகுதி மறுவரை குறித்து அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் நகல் வழங்கிட வேண்டும். குடியிருப்போர் நலன் கருதி பகுதி மறுவரையில் நடைபெற்றுள்ள குளறுபடிகளை சரி செய்ய ஏதுவாக பகுதி மறுவரை குறித்து அரசுக்கு பரிந்துரை செய்த விவரம் மற்றும் அதன் நகல்கள் வழங்கப்பட வேண்டும்.

எங்களது வார்டுகள் இருக்கும் பகுதியில் பேருந்துகள் வந்து செல்வதில்லை. பேருந்து இயக்கப்படும் பிரதான சாலைக்கும் எங்களது பகுதிக்கும் சுமார் 1.5 கி.மீ. தூரம் உள்ளது. எனவே எங்களது பகுதி வார்டுகள் A மண்டலத்தில் வராது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வார்டு எண்கள்.10, 11, 12 மண்டலம் A–யில் உள்ளதை C மண்டலமாக மாற்றி வரிகுறைத்து வசூல் செய்யப்பட வேண்டும் எனவும் இம்முறைமன்ற நடுவத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6) எதிர்மனுதாரரான பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் சார்பில் நகராட்சி நிருவாக அலுவலர் 27.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார். அதில் –

"பூவிருந்தவல்லி நகராட்சியில் உள்ள 21 வார்டுகளிலும் அரசாணை (நிலை) எண். 52, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022ன்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து உயர்வு செய்ய பூவிருந்தவல்லி நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.34, நாள் 01.04.2022ன் மூலம் நகர மன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கனவே உள்ள மண்டல அடிப்படை மதிப்பினை உயர்வு செய்து பொதுமக்களின் தகவலுக்காக தினசரி நாளிதழ்களில் செய்தி வெளியிட்டும் மற்றும் அலுவலக விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட்டு சொத்துவரி/காலிமனை வரி உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பிற்கு ஆட்டேசபனை ஏதுமிருப்பின் 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சொத்துவரி/காலிமனை வரி உயர்வு தொடர்பாக எந்தவொரு ஆலோசனைகள்/ஆட்சேபனைகள் பொதுமக்களிடமிருந்தோ மனுதாரரிடமிருந்தோ நகராட்சிக்கு வரப்படவில்லை.

எனவே பிரதான சாலையை ஒட்டியுள்ள சாலைகள் அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.02.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 01.04.2022ன்படி மண்டலம் A –வாக மாற்றியமைக்கப்பட்டு நகரமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு நகரமன்ற தீர்மான எண்.37 நாள் 23.05.2022ல் உயர்வு செய்திட தீர்மானிக்கப்பட்டு மண்டல அடிப்படை மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டு அமுல் படுத்தப்பட்டுள்ளது. மேற்படி மாற்றி அமைக்கப்பட்ட மண்டலங்கள் மற்றும் மண்டல மதிப்பு உறுதி செய்து 01.04.2022 முதல் அமுலுக்கு வரப்பட்டு சொத்துவரி/காலிமனை வரி

வசூலிக்கப்பட்டு வருகிறது. அரசாணை மற்றும் நகர்மன்ற தீர்மான அடிப்படையில் மட்டுமே சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டுள்ளது என்கிற விவரத்தினை இதன் மூலம் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரின்அறிக்கை, நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி நிருவாக அலுவலரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

வார்டு 10,11,12களில் அனைத்து சொத்துவரிகளும் மறுவரை செய்யப்பட்ட ஆண்டுகளில் ABC என பகுதிவாரியாக மறுவரை செய்யப்படும்போது பணியில் இருந்த அலுவலர்கள் என்ன விதமான அறிக்கை சமர்ப்பித்தார்கள், அவர்களின் அறிக்கை ஏற்கப்பட்டதா, நிராகரிக்கப்பட்டதா, நிராகரிக்கப்பட்டது எனில் மேல் முறையீடு செய்யப்பட்டதா, மேல்முறையீடு செய்யப்பட்டது எனில் அதற்கான ஆவண நகல் அனைத்தும் வழங்கினால் தங்களது பகுதி வாழ்மக்களின் நலன் கருதி எங்களின் தரப்பு நியாயத்தை எடுத்துரைத்து நாங்கள் மேல்முறையீடு செய்யவோ, நுகர்வோர் நீதிமன்றம் நாடி தீர்வுகாண ஏதுவாக இருக்கும் எனவும், வரி நிர்ணயம் செய்ய ABC என பகுதிகளாக பிரித்து அதற்கான வசதிகள் இருந்தால் தான் ABC என வரியில் பாகுபாடு செய்து குடியிருக்கும் பொதுமக்களுக்கு வரி நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என தெரிந்தும் அதனை கண்டுகொள்ளாமல் இருந்தது மிகப்பெரிய குற்றம் ஆகும் எனவும், மறுவரை செய்யும் ஆண்டுகளில் பணியில் இருந்த/செய்த அலுவலர்கள் முறையாக அரசுக்கு உரிய விளக்கத்துடன் அறிக்கை தாக்கல் செய்து இருந்தால் அன்றைய தினமே தீர்வு ஏற்பட்டிருக்கும் எனவும், எனவே ஆணையர் அவர்கள் தங்கள் பகுதி வாழ் குடியிருப்போர் நலன் கருதி வரி மறுவரையில் நடந்த குளறுபடியை சரிசெய்ய உதவிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் நாடியுள்ளார்.

பூவிருந்தவல்லி நகராட்சியில் உள்ள 21 வார்டுகளிலும் அரசாணை (நிலை) எண். 52, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 30.03.2022ன்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து உயர்வு செய்ய பூவிருந்தவல்லி நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.34, நாள் 01.04.2022ன் மூலம் நகர மன்றத்தின் அனுமதி பெற்றுள்ளதும், ஏற்கனவே உள்ள மண்டல அடிப்படை மதிப்பினை உயர்வு செய்து பொதுமக்களின் தகவலுக்காக தினசரி நாளிதழ்களில் செய்தி வெளியிட்டுள்ளதும், மற்றும் அலுவலக விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட்டு சொத்துவரி/காலிமனை வரி உயர்வு செய்யப்படும் மண்டல மதிப்பிற்கு ஆட்டேசபனை ஏதுமிருப்பின் 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதும், சொத்துவரி/காலிமனை வரி உயர்வு தொடர்பாக எந்தவொரு ஆலோசனைகள்/ஆட்சேபனைகள் பொதுமக்களிடமிருந்தோ மனுதாரரிடமிருந்தோ நகராட்சிக்கு வரப்படவில்லை என்பதும், பிரதான சாலையை ஒட்டியுள்ள சாலைகள் அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 01.04.2022ன்படி மண்டலம் A–வாக மாற்றியமைக்கப்பட்டு நகரமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு நகரமன்ற தீர்மான எண்.37 நாள் 23.05.2022ல் உயர்வு செய்திட தீர்மானிக்கப்பட்டு மண்டல அடிப்படை மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது என்பதும், மாற்றி அமைக்கப்பட்ட மண்டலங்கள் மற்றும் மண்டல மதிப்பு உறுதி செய்து 01.04.2022 முதல் அமுலுக்கு வரப்பட்டு சொத்துவரி/காலிமனை வரி வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதும், அரசாணை மற்றும் நகர்மன்ற தீர்மான அடிப்படையில் மட்டுமே

சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டுள்ளது என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி நிருவாக மேலாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நிலையில் அரசாணை மற்றும் நகர்மன்ற தீர்மான அடிப்படையில் மட்டுமே சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டு வருகிறது என்ற பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி நிருவாக அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதை ஏற்று இவ்வழக்கில் மேல் நடவடிக்கை மேற்கொள்ள அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.K.G.பூபதி,
எண்.58, நண்பர்கள் நகர், 3–வது தெரு,
பூவிருந்தவல்லி, சென்னை – 600 058.

2) ஆணையர்,
பூவிருந்தவல்லி நகராட்சி,
பூவிருந்தவல்லி,
சென்னை–600 058.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி, சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

13/3/26
செயலாளர்.